## நடைமுறையில் அன்பு

**26 மார்ச்**

பிலிப்பியர் 2:1-4

பிலிப்பியர் 2:2

**இ**யேசு சொன்னார் : ‘‘உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக’’ (மாற்கு12:31).

‘‘ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்’’ (யோவான் 15:12).

‘‘உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்’’ (லூக்கா 6:27).

இதை நடைமுறையில் செயல்படுத்த இரு குறிப்புகளை இன்றைய, நாளைய பகுதிகளில் காணலாம்.

‘‘ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (வச.3)’’. இதைச் சொல்வது மிகச் சுலபம். செயல்படுத்துவதோ கடினம்.



**செயல்படுத்து :** இயேசு எப்பொழுதும் தனது தேவைகளுக்கு முன் பிறரது தேவைகளை வைத்தார். இதே உள்ளத்துடன் நீயும் பிறரை நேசிக்க வேண்டும்.

**தேவனே, சுயநலத்தை விட்டுவிட்டு, பிறர் நலம் தேட எனக்கு உதவும். என் உள்ளத்தில் உம் அன்பை ஊற்றும். ஆமென்**

---

**27 மார்ச்**

## நடைமுறையில் அதிக அன்பு

பிலிப்பியர் 2:5-11

பிலிப்பியர் 2:10,11

**சு**யநலமற்றவர்களாக வாழக் கற்றுக் கொள்வதற்கு இது **இரண்டாம் குறிப்பு: கிறிஸ்து இயேசுவையே உங்கள் மாதிரி யாக வைத்து செயல்படுங்கள் (வச.5).**

6-11 வரையிலான வசனங்கள் பாடிய ஒரு பாடலாக இருந்திருக்கக் கூடும். ஆண்டவர் இயேசு உலகை மீட்பதற்காக வந்தபோது காட்டிய தன்னலமற்ற தன்மையைப் பாருங்கள்.

1. **தமது உரிமைகளைப் பெறும் முன் (வச.6)**
2. **தமது சொத்துக்களை உரிமை கொண்டாடும் முன் (வச.6)**
3. **தமது மகிழ்ச்சியை உரிமை கொண்டாடும் முன் (வச.7) நம்மை நேசித்தார்.**




என் சுய உரிமைகள், சொத்துக்கள், மகிழ்ச்சி இவை மற்றவர் களின் நலனுக்கு முன் பெரிதல்ல என்ற உணர்வைப் பெற்றா லொழிய கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையை நான் பெற முடியாது.